## சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று, பார்வை மற்றும் செவித்திறன் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி அளிக்கும் சிறந்த ஆசிரியர்களுக்காக வழங்கப்படும் மாநில விருது 'ஹெலன் கெல்லர் விருது' என்ற பெயரில் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை

**அரசாணை (நிலை) எண். 07** **நாள்: 31.07.2024,**

**குரோதி, ஆடி–15,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2055.**

**படிக்க :**

1. அரசாணை (நிலை) எண்.47, மாற்றுத்திறனாளிகள் நலத் (மாதிந.2) துறை, நாள்.19.10.2015.
2. அரசாணை (2ப) எண்.01, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை, நாள் 29.07.2022.
3. அரசாணை (2ப) எண்.07, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை, நாள் 28.11.2019.
4. அரசாணை (நிலை) எண்.17, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 04.07.2022.
5. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் கடித. ந.க.எண்.2429/உ.உ.பிரிவு/2024, நாள்.25.06.2024.

******

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று வழங்கப்படும் விருதாளர்களை தேர்ந்தேடுப்பதற்கான வரையறைகள் வெளிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்தவர்கள் / நிறுவனங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தின விழா (ஆகஸ்ட்–15) மற்றும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று (டிசம்பர்–3) வழங்கப்படும் மாநில விருதுகளுக்கான விருதாளர்களை தேர்வு செய்யும் மாநில அளவிலான தேர்வுக் குழு மாற்றியமைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2019–ஆம் ஆண்டு முதல் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விழாவினை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணிபுரிந்தவர்களில் சிறந்த பணியாளர்களுக்கான மாநில விருதினை 5–லிருந்து 10–ஆக உயர்த்தியும் தொழு நோயிலிருந்து குணமடைந்த பணியாளர் பிரிவினை, நடமாட இயலாதோருக்கான விருது பிரிவுடன் சேர்த்தும் மற்றும் 5 கூடுதல் விருதுகள் வழங்கிட ஏதுவாக தலா 10 கிராம் எடையுள்ள 5 எண்ணிக்கையிலான 22

கேரட் தங்கப்பதக்கமும் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்க ரூ.1,81,800/- கூடுதல் நிதி ஒதுக்கீடும் செய்து ஆணை வெளியிடப்பபட்டது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2022-ஆம் ஆண்டு முதல் பொது கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான தடையற்றச் சூழலை ஏற்படுத்தியுள்ள சிறந்த அரசு / தனியார் நிறுவனங்கள் விருதுக்கான தகுதிகளும் வெளியிடப்பட்டு அதன்படி தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று (டிசம்பர் 3) இரு மாநில விருதுகளை வழங்கவும், இவ்வாறு தேர்வு செய்யப்படும் விருதாளர்களுக்கு தலா 10 கிராம் தங்கப்பதக்கமும் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்க ரூ.1,60,000/- கூடுதல் நிதி ஒதுக்கீடும் செய்து ஆணை வெளியிடப்பட்டது,

5. இந்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2024-2025-ஆம் நிதியாண்டிற்கான மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் போது 21.06.2024 அன்று இன்னபிறவற்றுடன் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

> "செவித்திறன் மற்றும் பார்வைத்திறனால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நல ஆர்வலரான திருமதி. ஹெலன் கெல்லர் அவர்களை இளம் தலைமுறையினருக்கு கொண்டு செல்லும் நோக்கில், உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று பார்வை மற்றும் செவித்திறன் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி அளிக்கும் சிறந்த ஆசிரியர்களுக்காக வழங்கப்படும் மாநில விருது இனி **'ஹெலன் கெல்லர் விருது'** என அழைக்கப்படும்"

6. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், ஒவ்வொரு ஆண்டும் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை (டிசம்பர் 3) முன்னிட்டு, மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை புரிந்த நபர்கள் / நிறுவனங்களுக்கு பல்வேறுப் பிரிவுகளில், தமிழ்நாடு அரசின் மாநில விருதுகள் வழங்கப்பட்டு வரும் நிலையில், 2024-2025-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறைக்கான மானியக் கோரிக்கையின் போது, மேற்காணும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று (டிசம்பர்-3) பார்வை மற்றும் செவித்திறன் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி அளிக்கும் சிறந்த ஆசிரியர்களுக்காக வழங்கப்படும் இரண்டு மாநில விருதுகளை இனி வரும் காலங்களில், **'ஹெலன் கெல்லர் விருது'** என்ற பெயரில் வழங்க அனுமதித்து அரசாணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

7. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் செயற்குறிப்பினை நன்கு பரிசீலித்த அரசு அதனை ஏற்று, உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று (டிசம்பர்-3), செவித்திறன் மற்றும் பார்வைத்திறனால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நல ஆர்வலரான திருமதி. ஹெலன் கெல்லர் அவர்களை இளம் தலைமுறையினருக்கு கொண்டு செல்லும் நோக்கில், கீழே குறிப்பிட்டவாறு பார்வை மற்றும் செவித்திறன் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்வி அளிக்கும் சிறந்த ஆசிரியர்களுக்கு வழங்கப்படும்

மாநில விருதுகளை இனி "ஹெலன் கெல்லர் விருது" என பெயர் மாற்றி வழங்கிட அரசு ஆணையிடுகிறது.

| விருது வகை | பிரிவு | விருது எண்ணிக்கை | பெயர் |
|---|---|---|---|
| I.சிறந்த ஆசிரியர் | i) செவித்திறன் குறைபாடுடையோருக்கு கற்பித்தல் (HI)<br>ii) பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கு கற்பித்தல் (VI) | 1<br>1 | ஹெலன் கெல்லர் விருது |
| II.சிறந்த ஆரம்ப நிலை பயிற்சி மைய ஆசிரியர் | i) செவித்திறன் குறைபாடுடையோருக்கு கற்பித்தல் (HI) | 1 | |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிஜி தாமஸ் வைத்யன்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)

**நகல்:–**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**
31.07.2024